**In the Court of the Judicial Magistrate No.II, Kovilpatti**
**Deposition of Witness**

D.V.C 39/2023 PW-2

18-11-2025 செவ்வாய்கிழமை

Name **அழகையாப்பாண்டியன்**

Father's Name **வரதராஜன்**

**<u>சாட்சி நீதிமன்றத்தில் மீண்டும் ஆஜரானார். சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) நான் மனுதாரரின் உடன் பிறந்த சகோதரர் என்றால் சரிதான். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணம் ஆன பின் வெவ்வேறு ஊர்களில் வாழ்ந்து வந்தார்கள் என்றால் சரிதான். அந்த சமயத்தில் நான் அம்பாசமுத்திரத்தில் இருந்தேன். மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் குடும்ப பிரச்சனைகள் பற்றி நேரிடையாக எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

2) மனுதாரர் எதிர்மனுதாரர் மீது ஜீவனாம்சம் கோரி வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றால் சரிதான். ஜீவனாம்சம் மனுவில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டு அது அமலில் உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கானது ஜீவனாம்சம் கோரி மனுதாரர் தாக்கல் செய்துள்ளார்.

3) எதிர்மனுதாரர் அரசு பணியில் இருந்து ஓய்வு பெற்று ஓய்வூதியம் வாங்கி வருகிறார் என்றால் சரிதான். அவர் மாதம் ரூ. 14000/- ஓய்வூதியம் பணம் வாங்கி வருகிறார் என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு இதய அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4) எதிர்மனுதாரர் மனுதாரருடன் சேர்ந்து வாழ விருப்பமாக உள்ளார் என்றால் அதற்கு வாய்ப்பு இல்லை. மனுதாரருக்கு 2 மகன்கள் உள்ளார்கள். அவர்களுக்கு

திருமணம் ஆகிவிட்டது என்றால் 1 மகனுக்கு மட்டும் திருமணம் ஆகி உள்ளது. 2 மகன்களுக்குமே சம்பாத்தியம் உண்டு என்றால் சரிதான்.

5) மனுதாரர் எதிர்மனுதாரரை கஷ்டப்படுத்தும் நோக்கில் இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றாலும் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எதிர்மனுதாரர் தனக்கு வருகின்ற ஓய்வூதியம் முழுவதையும் மனுதாரருக்கு தர தயாரக உள்ளார் என்றாலும் அதை மனுதாரர் ஏற்றுக்கொள்ள மறுக்கிறார் என்றாலும் சரியல்ல.

என்னால் நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
தட்டச்சு செய்யப்பட்டு / எழுதப்பட்டு
சாட்சிக்கு / எதிரிக்கு படித்து காண்பிக்கப்பட்டு
அவரால் சரி என்று ஒப்புக்கொண்டு என் முன்
கையெழுத்து செய்தார்.

(ஒம்). M. மணிமேகலா, எம்.ஏ., எம்.எல்.,
நீதித்துறை நடுவர் எண்.2,
கோவில்பட்டி.